பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 10 சனிக்கிழமை 24.05.2025 கதிர் 196



இனி இது ரகசியம் அல்ல!

என்னுடைய கட்சித் தலைவரான ரோஹன விஜேவீரவுடன் நெருங்கிப் பழகியவன் நான். அவருக்கே சிலை வைக்கும்படி கேட்காத நானா பிரபாகரனுக்குச் சிலை ☞ 2

## இனப்படுகொலை என்று சொன்னால் நடவடிக்கை

# அமைச்சர் விஜித ஹேரத் தனது கருத்தை மீளப் பெறவேண்டும்

### கஜேந்திரகுமார் நாடாளுமன்றில் வலியுறுத்து

இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றதாக குறிப்பிடுபவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்ட கருத்தை வெளிவிவகாரத்துறை அமைச்சர் விஜித ஹேரத் உடனடியாக மீளபெறவேண்டும். இனப்படுகொலை குற்றச்சாட்டை எதிர்க்கொள்ள இலங்கைக்கு முதுகெலும்பு இல்லை. ஆளும்தரப்பின் நிலைப்பாடு கேலிக்கூத்தானது. நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் மற்றும் வெளிநாட்டுக்கடன்கள் (நீக்குதல்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் வழங்கிய நேர்காணலின்போது இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றுள்ளதாகக் கூறுபவர்களுக்கு எதிராகக் கடும் ☞ 8

## மின் கட்டணம் அதிகரித்தாலும் நீர்க் கட்டணம் அதிகரிக்காதாம்

மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளபோதும் அதற்கு நிகராக நீர்கட்டணம் அதிகரிப்பது தொடர்பில் எந்த கலந்துரையாடலும் மேற்கொள்ளப்படவில்லை. அதற்கான ☞ 9

### கதிர்காமம் முருகன் ஆலயத்தின்

## ஆடிவேல் திருவிழா கால மாற்றம் இந்துக்களை புண்படுத்துகின்றது

### கோடீஸ்வரன் எம்.பி. சுட்டிக்காட்டு

இந்துக்கள் காலம் காலமாக தொன்றுதொட்டு கடைப்பிடித்து வரும் கலாசாரம் மற்றும் மத வழிபாடுகளை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். மதிப்பளிக்கவேண்டும். ☞ 8

## ரூ. 2 கோடி பணத்துடன் சிலாபத்தில் இருவர் கைது

புத்தளம், சிலாபம் தொடுவாவ பகுதியில் போதைப்பொருள் கடத்தலினூடாக ஈட்டப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ஒரு கோடியே 80 இலட்சம் ரூபா பணத்துடன் 6 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிலாபம் தொடுவாவ பகுதியில் நேற்று முன்தினம் இரவு பொலிஸ் போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் அப்பகுதியினுடாக பயணித்த ☞ 8

### 6000 ஏக்கர் காணிப் பிரச்சினைக்கு

# பிரதமருடனான கூட்டத்தில் நேற்று முடிவு எதுவுமில்லை

### வர்த்தமானியை மீளப் பெற தமிழ் எம்.பிக்கள் வலியுறுத்து

வடக்கு மாகாணத்தில் சுமார் 6 ஆயிரம் ஏக்கர் காணிகளை அரசுடமையாக்கும் வகையில் ஆளும் தரப்பு வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் நேற்று பிரதமருடன் நடந்த சந்திப்பில் மீளப்பெறவேண்டும் என்று தமிழ்க் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ☞ 2



### என்பிபி சபை முதல்வர்

## பிமல் ரத்நாயக்க மீது விசாரணை தேவை

### நாடாளுமன்றில் எதிர்க் கட்சிகள் போர்க்கொடி

சபைமுதல்வர் பிமல் ரத்நாயக்கவின் செயற்பாடுகள் மற்றும் நடத்தைகள் கடந்த காலசபை முதல்வர்களின் நன்நடத்தைக்கு முற்றிலும் விரோதமானது என்று குறிப்பிட்டு 2025.05.20 ஆம் திகதியன்று சபை முதல்வர் நடந்துக்கொண்ட விதம் குறித்து விசாரணை செய்யுமாறு ஐக்கிய ☞ 8

## புத்தளம் – மன்னார் வீதியை திறக்க ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்குக

### மஸ்தான் எம்.பி. வலியுறுத்து

நீதிமன்ற உத்தரவால் மூடப்பட்டிருக்கும் புத்தளம் மன்னார் வீதியை மீண்டும் திறப்பதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும். அது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் ஏனைய தரப்பினருடன் கலந்துரையாடுவதற்கு விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென எதிர்க்கட்சி உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ☞ 2

## போக்குவரத்துத் திணைக்கள அதிகாரிகள் மூவருக்கு மறியல்

இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் ஒருவர் உட்பட மூன்று அதிகாரிகள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்று கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் ☞ 9

## தொழில்நுட்ப ரீதியாக மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பகிர்வு

### விரைவில் தேர்தலும் என்கிறார் அமைச்சர்

தொழில்நுட்ப ரீதியாக மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளோம். மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதற்கு அமைச்சு சார் மட்டத்தில் ஆரம்பகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கிறோம் என்று மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பொது நிர்வாக அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வில் சபை ஒத்திவைப்பு வேளையின் போது மாகாண சபை தேர்தல் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிசாம் காரியப்பர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோது இதனைத் தெரிவித்தார்.

“மாகாண சபைத் தேர்தலை இந்த ஆண்டு நடத்துவார் என்று ☞ 8

## 178 உள்ளூராட்சி சபைகளில் உறுப்பினர்களை அறிவிக்குக

### தேர்தல்கள் ஆணையாளர் கோரிக்கை

உள்ளூராட்சி மன்றங்களில் பதவிகளுக்கான நியமனங்கள் தொடர்பில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவுள்ளது. எனினும் எந்தவொரு தனி கட்சியும் 50 சதவீதத்துக்கும் அதிக வாக்குகளைப் பெற்றுக்கொள்ளாத 178 உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர்களது பெயர்களை விரைவில் சமர்ப்பிக்குமாறு தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் ஜூன் 2ஆம் திகதி ☞ 8

## 20 ரில்லியன் ரூபாய் நிதிக்கு என்ன நடந்தது?

### விசாரணை நடக்கும் என்கிறார் அமச்சர்

வெளிநாடுகளில் இருந்து கடன் பெற்றுக்கொள்ளும் போது அதிலும் மோசடி செய்யும் கலாசாரம்தான் கடந்த காலங்களில் காணப்பட்டன. பெற்றுக்கொண்ட அரசமுறை கடன்களில் சுமார் 20 ரில்லியன் ரூபா வரையான நிதி நேர்ந்ததென்ன என்பதற்கு முறையான ஆவணங்கள், குறிப்புகள் ஏதும் இல்லை. கணக்காய்வு திணைக்களத்தின் ஊடாக உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்று நிதி திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியபெரும தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ☞ 8

## இனி இது .....

வைக்கும்படி கேட்கப் போகின்றேன் என்று கேட்டிருக்கிறார் அமைச்சர் சந்திரசேரன்.

"பிரபாகரனுக்குசிலைவைப்பதுதொடர்பில் நான் ஒருபோதும் எந்த கருத்தையும் தெரிவிக்கவில்லை. நாட்டில் நல்லுறவை கட்டியெழுப்புவதற்கு நாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைதடுப்பதற்குஎதிர்க்கட்சியினர் மேற்கொள்ளும் பொய் பிரசாரம் இது" என்று வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது அமைச்சர் தெரிவித்தார்.

"நான் சபையில் இல்லாத சந்தர்ப்பத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா தவறான கூற்றொன்றை நான் கூறியதாக சபையில் தெரிவித்துள்ளார்.

பிரபாகரனுக்குசிலைவைப்பதுதொடர்பாக நான் சபையில் தெரிவித்தேன் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா அதனை அவருக்குக் கூறினார் எனவும் அவர் இங்கு குறிப்பிட்டுள்ளார். எனினும் எந்தச் சந்தர்ப்பத்திலும் நான் அவ்வாறு எதனையும் கூறவில்லை.

எனது கட்சித் தலைவர் ரோஹண விஜேவீர. நான் அவருடன் நெருக்கமாகப் பழகியவன். அவர் மறைந்தாலும் அந்த நினைவுகளும் உணர்வுகளும் என்றும் எனக்குள் இருக்கின்றன. அதேபோன்று 89ஆம்ஆண்டுஉயிரிழந்தபெருமளவானோர் உள்ளனர்.அவர்கள்இன்றும்எமதுஉள்ளத்தில் நிலைத்திருக்கின்றனர்.

அவ்வாறு எங்கள் அனைவருக்கும் தலைமைத்துவம் வழங்கிய எமது தலைவர் ரோஹண விஜேவீரவுக்கு சிலை வைக்க வேண்டும் என்றுகூட நான் இதுவரை எங்கும் கூறியதில்லை. அவ்வாறான நான் வேறு ஒருவருக்குச் சிலை வைப்பது தொடர்பில் கூறுவேனா? அந்த வகையில் மேற்படி கூற்று முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது.

பிரபாகரன்மட்டுமல்ல. உமாமகேஸ்வரன், சபாரெத்தினம் என பல தலைவர்கள் இருந்தனர். அவர்கள் தமிழ் மக்களின் நலனுக்காக சில கனவுகளை கண்டனர். எனினும் அவை தோல்வி கண்டன. அவர்கள் இறந்து 16 வருடங்கள் கடந்துள்ள நிலையில் நாட்டில் நல்லுறவை கட்டியெழுப்புவதற்காக நாம் முன்வந்துள்ளோம். அதனைத் தடுப்பதற்கும் மீண்டும் நாட்டில் இனவாதத்தை கொண்டு வருவதற்கும் அத்துடன்தேசிய மக்கள் சக்தி மற்றும் ஜேவிபி தொடர்பில் தவறான கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்புவதற்கும் முயற்சிக்கின்றனர். இதுபோன்ற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டாம் எனவும் எதிர்க்கட்சியினரை கேட்டுக்கொள்கிறேன்"என்றுதெரிவித்திருந்தார் சந்திரசேகரன்.

இந்த விவகாரம் உள்ளூராட்சி சபைகளையொட்டி எழுந்த ஒன்று என்று நினைக்கின்றேன். அப்போது இதனை சிவாஜிலிங்கம் எழுப்பியிருந்தார். தமிழ் மக்களின் வாக்குகளைக் கவர்வதற்காக பிரபாகரனுக்கு என்பிபி ஆட்சியில் சிலை எழுப்பப்படும் என்று ஒரு கதை சமூக ஊடகங்கள்மூலம்பரப்பப்பட்டது. அதேபோன்று சில பாடல்களும் வெளியிடப்பட்டன. இதையடுத்து சிவாஜிலிங்கம் இது குறித்துக் கேள்வி எழுப்பினார்.

அமைச்சர் சந்திரசேகரன் நடத்திய செய்தியாளர்கள்சந்திப்பில்சிவாஜிலிங்கத்தின் கேள்வி தொடர்பில் அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார் செய்தியாளர் ஒருவர். முதலில் அந்தப் பாடல் குறித்துத் தனக்கு எதுவும் தெரியாது என்று மறுத்தார் அமைச்சர். உடனேசெய்தியாளர்கள்தமதுஅலைபேசியில் அதனைக் காண்பித்ததும், கட்சிக்கு ஆதரவானவர்கள் யாராவது ஏதாவது செய்யக்கூடும்அது பற்றித் தனக்குத் தெரியாது என்று மறுத்தார். ஆனால் பிரபாகரனுக்குச் சிலை எழுப்புவது குறித்து நேரடியாகக் கருத்துத் தெரிவிக்காமல் நழுவினார்.

நாடாளுமன்றத்தில் பேசும்போது எனது கட்சித் தலைவர் ரோஹனவிற்கே சிலை எழுப்பக் கேட்காத நான் பிரபாகரனுக்காக சிலைஎழுப்பக் கேட்பேன் என்கிற தொனியில் அவர் அப்போது பதிலளிக்கவில்லை. அதற்குப் பதிலாக இந்த நாட்டில் ஆயுதம் தூக்கிப் போராடியவர்களுக்கு ஒரு கனவு இருந்தது, அந்தக் கனவை நனவாக்கும் வல்லமை இன்றுள்ளதமிழ்க்கட்சிகளின்தலைவர்களுக்கு இருக்கிறதா, போராளிகளின் அர்ப்பணிப்பிற்கு இவர்கள் ஈடாவார்களா என்றெல்லாம் பலவற்றையும் கூறி பிரபாகரனின் சிலைக் கேள்விக்கு நேரடியாகப் பதில் கூறாமல் தவிர்த்துவிட்டார்.

நாடாளுமன்றத்தில் இப்போது பேசுகின்ற இந்தத் தெளிவுடனேயே அன்றும் அமைச்சர் பதில் சொல்லியிருக்கலாம். பிரபாகரனுக்குச் சிலை எல்லாம் எழுப்பமாட்டேன் என்று அடியோடு மறுத்திருக்கலாம். தேர்தல் காலத்தில் அப்படிச் சொல்லப்போய் விழும் வாக்குகளும் பறிபோனால் என்ன செய்வது? அதனால் நகைச்சுவை நடிகர் வடிவேலு சொல்வதைப்போல அது வேற வாய், இது நாற வாய் என்றுவிட்டுப் போக வேண்டியதுதான் போலும்.

.........................................

காணிப் பிரச்சினை தொடர்பாகப் பிரதமர் தலைமையிலான குழுவினருக்கும் வடக்கு கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பில்தமிழ்த் தரப்பினரின் கருத்துக்களை ஆளும்தரப்பினர் அக்கறையோடு செவிமடுத்தனர் என்று சொல்லிவிடமுடியாது என்று அறியமுடிந்தது. தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள்இனவாதத்தோடுபேசுகிறார்கள் என்கிற அணுகுமுறையோடு அவர்களின் கருத்துக்கள் துச்சமாக மதிக்கப்பட்டன என்றும் தெரிகிறது.

காணிகளை அரசுடமையாக்கும்நோக்கம் ஆளும்தரப்புக்கு இல்லை என்று பிரதமர் அந்தக் கூட்டத்தில் அழுத்திக் கூறினாலும், அப்படியானால் காணிப் பிரச்சினை வடக்கு கிழக்கு முழுவதும் இருக்கும் நிலையில் ஏன் கரையோரக் காணிகளுக்கு மட்டுமாக இந்த வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது என்கிற கேள்விக்கு அவரிடம் பதில் இல்லை. ஆனால், காணிகள் அரசுக்குச்சொந்தமானவை என்கிற அடிப்படையில் அதனை ஆளும்தரப்பு கையகப்படுத்துவதை தமிழர் தரப்பு எதிர்க்க முடியாது என்கிற ஆதிக்க மனோநிலை அங்கு மேலோங்கியிருந்ததையும்உணரமுடிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில், பிரதமருடனான பேச்சு இந்தப் பிரச்சினையில் எந்த அடைவையும் முன்வைக்காத நிலையில், அடுத்த கட்டமாக இந்த விவகாரத்தைச் சட்டரீதியாகவும் அணுகுவது என்று தமிழ் அரசுக் கட்சி முடிவு செய்துள்ளது. அதற்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வெற்றிலைக்கேணியில் உள்ள ரம்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சட்ட உதவிகள் வழங்கப்படும் என்று தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் தெரிவித்திருக்கிறார். பாதிக்கப்படவுள்ள மக்களுக்கான இலவச சட்ட ஆலோசனை மற்றும் உதவிகளின் முதல் கட்டமாக நாளை இந்தப் பணிகள் தொடங்கப்படுகின்றது என்றும் விரைவில் ஏனைய பகுதிகளிலும் இதுபோன்ற இலவச சட்ட உதவி -முகாம்கள் இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

"பிரதமர் நேற்று வெள்ளிக்கிழமை வடக்கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்தபோதும் ஓர் உறுதியான பதிலையோ அல்லது வர்த்தமானியை இரத்துச் செய்யும் நம்பிக்கையையோ வழங்காதமையால் நாம் அடுத்தகட்ட நடவடிக்கைக்குத் தயாராகவுள்ளோம்.

இதன் முதல்கட்டமாக 4 மாவட்டங்களிலும் அறிவிக்கப்பட்ட பிரதேசங்களின் நில உரித்தாளர்களுக்குத் தேவையான இலவச சட்ட உதவிகளை வழங்கும் வகையில் அந்த இடங்களுக்கே சட்டத்தரணிகள் குழாம் நேரில் வருகை தரவுள்ளது.

இதற்கமைய நாளை ஞாயிற்றுக்கிழமை காலை9மணிக்குவெற்றிலைக்கேணிரம்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் இந்தச் சட்ட உதவிகள் மற்றும் ஆலோசனைகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்தப் பகுதி மக்கள் இதில் பங்குகொள்ளலாம். ஏனைய மாவட்டங்களில் இடம்பெறும் பணிகள் தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும்" என்றார் சுமந்திரன்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பிரதமருடனான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்தியபோதும், அது தொடர்பில் எந்த இறுதி முடிவும் எடுக்கப்படவில்லை. காணி அமைச்சின் அதிகாரிகளுடன் கலந்தாய்வு செய்து முடிவை அறிவிப்பார் என்று காணி அமைச்சர் லால்காந்த தெரிவித்தார்.

ஆளும்தரப்பு விடுத்த வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ள கால எல்லை முடிவடைய இன்னும் 4 நாட்களே இருக்கும்போது, இந்த விவகாரத்தில் ஒரு இறுதி முடிவும் எட்டப்படவில்லை. ஆளும்தரப்பின் வர்த்தமானி அறிவித்தல் மே 28ஆம் திகதிக்கு முன்பாகத் திரும்பப் பெறப்படவில்லை என்றால், ஆளும்தரப்புக்கு எதிராகப் பெரும் போராட்டம் இடம்பெறும் என்றும்ஜனாதிபதியைவடக்குக்குவரவிடாமல் தடுப்போம் என்றும் தமிழ் அரசுக் கட்சி ஏற்கனவே அறிவித்திருக்கின்றன.

காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் 28.03.2025 ஆம் திகதியிடப்பட்டு வெளியிடப்பட்ட 2430 வர்த்தமானி அறிவித்தலில், வடக்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும்மன்னார்ஆகியமாவட்டங்களில்உள்ள 5,940ஏக்கர்காணிகளை3மாதகாலத்துக்குள் எவரும் உரிமை கோராதுவிடின், அவை அரச காணிகளாகப் பிரகடனப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

இருப்பினும்அவ்வர்த்தமானிஅறிவித்தல் தொடர்பில் வடக்கு கிழக்கு தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர். மக்கள் மத்தியிலும் அதற்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. இதையடுத்து, இந்த விவகாரம் குறித்து கலந்துரையாடும் நோக்கில் நேற்று மு.ப 11 - பி.ப 1 மணிவரை நாடாளுமன்றத்தில் பிரதமர் ஹரினி அமரசூரிய தலைமையில் ஆளும்தரப்புப் பிரதிநிதிகளுக்கும், வடக்கு கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சிப் நாடாளுமன்றஉறுப்பினர்களுக்கும்இடையில் சந்திப்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அச்சந்திப்பில் ஆளும்தரப்பு சார்பில் பிரதமர் ஹரினி அமரசூரிய, விவசாய, கால்நடை மற்றும் காணி அமைச்சர் லால்காந்த, பிரதியமைச்சர் சுசில் ரணசிங்க, அவ்வமைச்சின்செயலாளர்டி.பி.விக்ரமசிங்க, மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் விக்கும் டி ஆக்ரு, பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதாந்ரி, காணிப்பதிவு திணைக்களத்தின் அதிகாரிகள், மாவட்டச் செயலாளர்கள் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

அதேபோன்று வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் அதன் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறிதரன், சத்தியலிங்கம், ரவிகரன், கோடீஸ்வரன் மற்றும் குகதாசன் ஆகியோரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் கஜேந்திரகுமாரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ரவூப் ஹக்கீம் மற்றும் நிஸாம் காரியப்பர் ஆகியோரும், ஆளும் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் அமைச்சர் சந்திரசேகரன், பிரதியமைச்சர் அருண் ஹேமசந்திர, ஸ்ரீ பவானந்தராஜா, ரஜீவன் ஜெயசந்திரமூர்த்தி உள்ளிட்டோரும் கலந்துகொண்டிருந்தனர்.

அதன்படிஇச்சந்திப்பில்கருத்துவெளியிட்ட சிறிதரன் மற்றும் கஜேந்திரகுமார் ஆகியோர் வடக்கிலுள்ள காணிகள் தொடர்பில் வெளியிடப்பட்டிருக்கும் வர்த்தமானி அறிவித்தல் நீக்கப்படவேண்டும் என ஒருமித்து வலியுறுத்தினர்.

மூன்று தசாப்தகாலப் போர், அதன் விளைவாகநிகழ்ந்த இடப்பெயர்வுகள், சுனாமி போன்ற பல்வேறு காரணங்களால் வடக்கு, கிழக்கில் வாழும் பெரும்பான்மையான மக்களிடம் அவர்களது காணிகள் தொடர்பான ஆவணங்கள் இல்லை. அதன் காரணமாக அவர்கள் தமது காணி தொடர்பான உரித்தை நிரூபிக்கமுடியாத நிலையில் உள்ளனர். அதேபோன்று அம்மாகாணங்களைச்சேர்ந்த பலர் போரின் விளைவாகவும், பயங்கரவாதத்தடைச்சட்டம் உள்ளிட்ட ஒடுக்குமுறைச்சட்டங்களின் பிரயோகத்தினாலும், ஏனைய அச்சுறுத்தல்களாலும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசித்துவருகின்றனர். அவர்களில்சிலரிடம்காணிஉரித்துதொடர்பான ஆவணம் இருப்பினும், அவர்கள் மீண்டும் நாட்டுக்குவருகைதருவதற்குஅஞ்சுகின்றனர். அத்தோடு வடக்கு, கிழக்கில் வசிக்கும் பலர் இத்தகையதோர் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது குறித்து அறியாதுள்ளனர் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

அதுமாத்திரமன்றிஇவ்வாறானவர்த்தமானி அறிவித்தல்கள்மற்றும்சுற்றறிக்கைகள்ஊடாக ஆளும்தரப்புகளினால் மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்ட வரலாறு இலங்கைக்கு இருப்பதனாலும், இவ்வர்த்தமானிஅறிவித்தல் தொடர்பில் பல்வேறு கேள்விகள் எழுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

வடக்குகிழக்குமக்கள்முகங்கொடுத்துவரும் காணி தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பது தான் அரசாங்கத்தின் நோக்கம் எனின், அதற்கு குறித்த காலப்பகுதிக்குள் காணிகள் உரிமை கோரப்படாதவிடத்து, அவை அரசுடைமையாக்கப்படுவதற்கு இடமளிக்கக்கூடிய சட்டத்தைப் பிரயோகிக்கவேண்டிய அவசியமில்லை. மாறாககாணிகளுக்கானஉறுதிப்பத்திரங்களை வழங்குவதற்கு, அவசியமேற்படும் பட்சத்தில் புதியதொரு சட்டத்தை உருவாக்கலாம்.

அதேபோன்று வடக்கு, கிழக்கில் பெரும்பாலும்சகலமாவட்டங்களிலும்காணிப் பிரச்சினைநிலவுகின்றது. அவ்வாறிருக்கையில் ஏனைய மாவட்டங்களை விடுத்து, வடக்கில் கரையோரப்பகுதிகளாக இருக்கக்கூடிய யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களை மாத்திரம் இலக்குவைத்து இவ்வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருப்பது ஆளும்தரப்பின் நோக்கம் தொடர்பில் சந்தேகங்களைத்தோற்றுவிக்கின்றதுஎன்றும் தமிழ்ப்பிரதிநிதிகள் எடுத்துரைத்தனர்.

அதனை ஆமோதித்த ஆளும் தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அருண் ஹேமசந்திர, இவ்வர்த்தமானி அறிவித்தல் குறிப்பிட்டகாரணங்கள்தமிழ்மக்கள்மத்தியில் பலத்தகுழப்பங்களைத்தோற்றுவித்திருப்பதாக ஏற்றுக்கொண்டார்.

தமிழ்ப் பிரதிநிதிகளின் கருத்துக்களை செவிமடுத்த பிரதமர் ஹரினி அமரசூரிய, ஆளும்தரப்பு இவ்வர்த்தமானிஅறிவித்தலை வெளியிட்டதன் நோக்கம் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளை அபகரிப்பது அல்ல எனவும்,மாறாகஅவர்கள்முகங்கொடுத்துவரும் காணிதொடர்பானபிரச்சினைகளைத்தீர்ப்பதே எனவும் விளக்கமளித்தார்.

இருப்பினும் தமிழ்ப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியவாறான சிக்கல்கள் காணப்படுவதனையும், அதன் விளைவாக குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதன் நோக்கத்தை உரியவாறு அடைந்துகொள்ளமுடியவில்லை என்பதனையும் பிரதமர் ஏற்றுக்கொண்டார்.

அதனையடுத்து கருத்துரைத்த காணி அமைச்சர்லால்காந்த, இவ்விடயம்தொடர்பில் அமைச்சின் ஏனைய அதிகாரிகளுடன் கலந்துரையாடி, வெகுவிரைவில் தீர்வொன்றைத் தான் அறிவிப்பார் என்று உறுதியளித்தார்.

## புத்தளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

புத்தளம் மன்னார் வீதி 2019ஆம் ஆண்டு மூடப்பட்டது. அந்த வீதியை ஊடறுத்து செல்லும் கல்ஓயா பாலம் பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதாக தெரிவித்தே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது. இந்தப் பாலத்தை திருத்துவதற்கு நாங்கள் பல தடவைகள் முயற்சித்தபோதும்ஒருசிலஅரசியல் காழ்ப்புணர்ச்சிகளால் அந்த முயற்சிகள் குழப்பப்பட்டன. இந்த நிலையிலே ஒருசிலர் புத்தளம் நீதிமன்றில் இதுதொடர்பில் வழக்கு தொடுத்தார்கள்.

இந்தவீதிமூடப்பட்டிருந்தபோதும்அதனை பயன்படுத்தமுடியுமானஒருநிலையேஇருந்து வந்தது. வீதியை நவீனப்படுத்த முடியாது என்றேநீதிமன்றதீர்ப்புஇருந்தது. அவ்வாறான நிலையில் கடந்த ஆளும்தரப்பில் முன்னாள் ஜனாதிபதியுடன் இது தொடர்பாக நாங்கள் கலந்துரையாடியபோது அந்தக் கூட்டத்துக்கு சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளும் வந்திருந்தார்கள். அவர்களேவீதி அதிகாரசபை மற்றும் ஏனைய நிறுவனங்களுக்குப் பிழையானகருத்துக்களைதெரிவித்துள்ளனர் என்ற சந்தேகம் எமக்கு இருக்கிறது.

ஜனாதிபதி,பிரதமர்மன்னாருக்குவந்திருந்த சந்தர்ப்பத்திலும்இந்தப் பாதையைத்திறப்பது தொடர்பில் சாதகமான கருத்துக்களை தெரிவித்திருந்தனர். மக்களும் அதுதொடர்பில் மகிழ்ச்சியுடன் பெரும் எதிர்பார்ப்புடடன் இருந்தார்கள். தற்போது நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு பெரும் ஏமாற்றத்தை அளித்திக்கிறது. இந்த வீதியால் யாழ்ப்பாணம், மன்னாருக்கு 100 கிலோ மீற்றர் குறைவாக பயணிக்க முடியும். இதனால் செலவுகளைக் குறைக்க முடியுமாவதுடன் நேரத்தையும் மீதப்படுத்திக்கொள்ள முடியும். எனவே நீதிமன்ற தீர்ப்புஎமக்கு வேதனை அளிக்கிறது. அதனால் இது தொடர்பில் சட்டமா அதிபர்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயை கட்டுப்படுத்துவது குறித்த கூட்டம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோயை கட்டுப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் வியாழக்கிழமை யாழ் .மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் தலைமையுரையாற்றிய அரசாங்க அதிபர் -

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோய் கட்டுப்படுத்தலில் வினைத்திறனான செயற்பட்டு வரும் சுகாதாரத்துறையினர், உள்ளூராட்சிதுறையினர் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஆகியோருக்கு தமது நன்றியினைத் தெரிவித்தார், தற்போது மழை பொய்து வருவதால் ஏற்படக்கூடிய டெங்கு நோய் பரவல் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

பொது மக்களுக்கான போதிய விழிப்புணர்வின் அவசியத்தினையும் எடுத்துக்கூறினார். மேலும், விழிப்புணர்வு செயற்பாட்டிற்கு கிராம மட்ட உத்தியோகத்தர்களை வழிப்படுத்துமாறும் பிரதேச செயலாளர்களைகேட்டுக்கொண்டதுடன்,கழிவகற்றல் தொடர்பாகவும் சரியான பொறிமுறையின் அவசியத்தினையும் வலியுறுத்தினார்.

மேலும் இக் கூட்டத்தில் முன்னெச்சரிக்கையாக டெங்குக் நோய் வராமல் தடுப்பதற்குரிய வழிவகைகள் ஆராயப்பட்டு பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

1.பாடசாலைகளிலும் தனியார் கல்வி நிறுவனங்களிலும் டெங்கு பரவலை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

2.2025 ஆம் ஆண்டு டெங்கு தாக்கத்தை கட்டுப்படுத்த பிரதேச செயலாளர் தமது பிரதேச செயலகங்களில் ஜூன் மாதம் முதல் 3 ஆவது புதன்கிழமை 2.30 மணிக்கு டெங்குக் கட்டுப்பாட்டுக் குழுக்கூட்டம் நடாத்துவதுடன் அதன் கூட்டக்குறிப்பு மாவட்ட செயலகத்திற்கு அறிக்கையிடுமாறும் கோரப்பட்டது.

3.கிராமமட்ட டெங்குக்குழுக்கூட்டத்தினைஜூன் மாதம்முதல் 1ஆவது,2ஆவது செவ்வாய்க்கிழமைகளில் நடத்துவதற்கும் அது தொடர்பான கூட்டக்குறிப்பு பிரதேச செயலாளருக்கு அறிக்கையிடுமாறும் கோரப்பட்டது.

4.ஜூன் 1 ஆம் திகதி முதல் முன்மாதிரியாக மாவட்ட செயலகம் மற்றும் பாடசாலைகளில் கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டிருத்தல் வேண்டும் எனவும், அவ்வாறுதரம்பிரிக்காமல்காணப்படுமாயின் அதற்குரிய அபராதம் விதிக்கப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. யாழ் மாவட்டத்திலுள்ள ஏனைய திணைக்களங்கள் கால அவகாசத்திற்கு அமைய, ஜூலை 1ஆம் திகதி முதல் இந் நடைமுறையை பின்பற்றுமாறு தெரிவிக்கப்பட்டது.

5.பிளாஸ்டிக், பொலித்தீனை கட்டுப்படுத்தல் தொடர்பான நடைமுறைகளை மத்திய சுற்றாடல் அதிகார சபையினர் பொதுமக்களுக்கு அது தொடர்பான சரியான அறிவுறுத்தல்களை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டது.

6.கழிவுகளை வீதிகளில் கொட்டுவதை குறைப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக யாழ்ப்பாண மாநகர சபையினாலும், கோப்பாய் பிரதேச சபையினாலும் கண்காணிப்பு கமரா பொருத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், மாவட்ட பிரதேச செயலாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள் சிரேஷ்ட பொது சுகாதார பரிசோதகர்கள், பிரதேச சபை செயலாளர்கள், கடற்படை மற்றும் இராணுவ அதிகாரிகள் மற்றும் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.







## சம்மாந்துறையில்

# பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தொற்றா நோய்ப் பரிசோதனை

(பாறுக் ஷிஹான்)

சம்மாந்துறை பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தொற்றா நோய் பரிசோதனை மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி குழுவினரால் வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இதற்கமைய அம்பாறை மாவட்டத்தில் கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிமனையின் பணிப்பாளர் வழிகாட்டல்களுக்கமைய சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எம். நௌசாத் தலைமையில் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸாரின் போசாக்கு அளவிடப்பட்டு உடற் திணிவுச் சுட்டெண் கணிப்பு , குருதி அழுத்தம், இரத்த சீனி அளவு, இடுப்புச் சுற்றளவு, உயரத்திற்கேற்ற நிறையின் அவசியம் தொடர்பான கருத்தாடல்களுடன் உத்தியோகத்தர்களுக்கு தனிப்பட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர், பொதுச்சுகாதார பரிசோதகர், சுகாதார ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# கிராம உத்தியோகத்தரின் தீராத முயற்சியால் தடுக்கப்பட்ட மற்றுமோர் சதுப்புநில அபகரிப்பு.

(சகாதேவராஜா)

காரைதீவு பிரதான வீதியில் உள்ள ஒரு சதுப்புநில அபகரிப்பானது வியாழக்கிழமை குறித்த பகுதி கிராம உத்தியோகத்தரால் தடுக்கப்பட்டுள்ளது.

காரைதீவு பிரதேச செயலாளர் பிரிவில் காரைதீவு 01 கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட பிரதான வீதியை அண்டிய பகுதிகளில் உள்ள சதுப்புநில வயல் காணிகள் அனுமதியற்ற வகையில் மூடப்பட்டு வருகின்றன.

இது தொடர்பான பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு கடந்த 01.04.2025 ஆம் திகதி கிராம உத்தியோகத்தரால் சதுப்பு நில காணி மண்ணிட்டு நிரப்பியமை தொடர்பாக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டதோடு குறித்த மண் அகற்றப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் (வியாழக்கிழமை) மேலும் ஒரு சதுப்பு நில அபகரிப்பானது குறித்த பகுதி கிராம உத்தியோகத்தரால் தடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -







பிரதான வீதி காரைதீவு 01 இல் அமைந்துள்ள சதுப்புநில காணியானது இனந்தெரியாத நபர்களால் கடந்த 09.05.2025 ஆம் திகதி அனுமதியற்ற வகையில் மண்ணிடப்பட்டபோது, அது தொடர்பான பொலிஸ் முறைப்பாடு கிராம உத்தியோகத்தரால் பிரதேச செயலாளர் ஊடாக மேற்கொள்ளப்பட்டது.

அதனைத்தொடர்ந்து குறித்தகாணியினுள் இடப்பட்ட கிறவல் மண்ணானது காரைதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெகத், ரத்நாயக்க மற்றும் குறித்த பிரிவு கிராம உத்தியோகத்தர் கஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில்மண்ணானது அகற்றப்பட்டது. இச் செயற்பாட்டிற்கான வாகன உதவியை காரைதீவு பிரதேச சபை வழங்கியிருந்தது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நேர்மையின் அவசியம்

இலங்கையின் அரசியல் மற்றும் நிர்வாக அமைப்புகளில் நேர்மையும் பொறுப்பும் மிக முக்கியமான அம்சங்களாகும். அந்த வகையில், கணக்காய்வாளர் நாயகப் பதவிக்கான அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவின் பரிந்துரை அரசமைப்புச் சபையால் இருமுறை நிராகரிக்கப்பட்டது, நாட்டின் நிர்வாகத் துறையில் சீர்கேடுகளையும், அரசியல் சிக்கல்களையும் வெளிப்படுத்துகிறது.

அரசுத் தலைவர் பரிந்துரைத்த நபர், ஹெச்.டி.பி. சந்தன, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இயக்குனர் குழுவில் உறுப்பினராக இருப்பதுடன், கணக்காய்வாளர் நாயகப் பதவிக்குத் தேவையான அனுபவம் குறைந்தவராகவும் உள்ளார். இது, அந்தப் பதவியின் சுயாதீனத்தையும், நம்பிக்கையையும் பாதிக்கும் அபாயத்தை ஏற்படுத்துகிறது. அதனுடன், அவர் மற்றும் அரசுத் தலைவரின் கல்விப் பின்னணித் தொடர்புகள், இந்த நியமனத்தின் பின்னால் உள்ள தனிப்பட்ட செல்வாக்கு குறித்த சந்தேகத்தையும் ஏற்படுத்துகின்றன.

இந்த நியமன முயற்சியை அரசமைப்புச் சபை நிராகரித்தது, நாட்டின் ஜனநாயக அமைப்புகளின் செயல்பாட்டை உறுதிப்படுத்துகிறது. அரசமைப்புச் சபையின் இந்த முடிவு, அரசியல் பாதிப்புகளுக்கு இடமளிக்காமல், சுயாதீனமான மற்றும் தகுதியான நபர்களை முக்கிய பதவிகளில் நியமிக்கவேண்டும் என்பதன் நோக்கத்தை நிறைவேற்றுவதாக இருக்கிறது.

இந்தச் சூழலில், கணக்காய்வாளர் நாயகப் பதவிக்கு தற்போதைய செயற்பாட்டுப் பதவியாளர் ஜி.எச்.டி. தர்மபாலவுக்கு ஆறு மாதங்கள் நீடிப்பு வழங்கப்பட்டது. இது, நிர்வாகத் தொடர்ச்சியை உறுதிப்படுத்தும் நடவடிக்கையாகும். ஆனால், இது ஒரு தற்காலிக தீர்வாக மட்டுமே பார்க்கப்பட வேண்டும்; நிரந்தரமான, தகுதியான நியமனம் அவசியமாகிறது.

இந்த நிகழ்வுகள், அரசின் நியமனங்களில் அதிக கவனமும், நேர்மையும் தேவைப்படுவதை உணர்த்துகின்றன. முக்கிய நிர்வாகப் பதவிகளில் நியமிக்கப்படும் நபர்கள், தகுதியும், அனுபவமும் கொண்டவர்களாகஇருக்கவேண்டும்.அரசியல்பாதிப்புகள் அல்லது நெருங்கிய தொடர்புகள், நியமனங்களில் இடம் பெறக்கூடாது.

இலங்கை, தற்போது பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகிறது. இந்தச் சூழலில், அரசின் செயல்பாடுகள், மக்கள் நம்பிக்கையை மீட்டெடுக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்துகின்றன. அதற்கு, அரசியல் தலைவர்கள், நிர்வாகத் துறைகளின் சுயாதீனத்தையும், நேர்மையையும் உறுதிப்படுத்த வேண்டும்.

முடிவில், கணக்காய்வாளர் நாயகப் பதவிக்கான நியமனத்தில் ஏற்பட்ட இந்தச் சிக்கல், அரசின் நியமனங்களில் அதிக கவனமும், பொறுப்பும் தேவைப்படுவதை உணர்த்துகிறது. அரசமைப்புச் சபையின் முடிவுகள், நாட்டின் ஜனநாயக அமைப்புகளின் செயல்பாட்டை உறுதிப்படுத்துகின்றன. அரசும், அதன் தலைவர்களும், இந்தச் சூழலை ஒரு பாடமாகக் கொண்டு, எதிர்காலத்தில் நியாயமான, சுயாதீனமான நியமனங்களை மேற்கொள்ள வேண்டும்.

# சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய குளிர்பான நிலையத்துக்கு ஐம்பதாயிரம் ரூபா தணடம்

(சுபேசன்)

பூநகரி - முழங்காவில் பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய குளிர்பான நிலையத்துக்கு கிளிநொச்சி நீதிமன்றால் செவ்வாய்க்கிழமை ஐம்பதாயிரம் தண்டம் விதிநிவர்த்திக்கப்பட்டதோடு - ஒருவாரத்தினுள் அனைத்து குறைபாடுகளையும் நிவர்த்திசெய்யுமாறு கடும் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்தமாதம் மேற்பார்வை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் தலைமையில் நடத்துப்பட்ட பரிசோதனையில் குறித்த குளிர்பான நிலையம் சுகாதார சீர்கேடுகளுடன் இயங்குகின்றமை கண்டுபிடிக்கப்பட்டது.

இனங்காணப்பட்ட பத்துக்குற்றங்களுக்குமாக முழங்காவில் பிரிவு பொதுசுகாதார பரிசோதகரால் கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

நீதிமன்றால் குற்றங்கள் உறுதிசெய்யப்பட்டதையடுத்து குளிர்பான நிலைய உரிமையாளருக்கு கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டதோடு தண்டப்பணமாக ஐம்பதாயிரம்ரூபாவும்விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை சந்தைப் பகுதியில் திடீர் சோதனை முன்னெடுப்பு

(பாறுக் ஷிஹான்)

பொது மக்களுக்கு சுகாதாரம் மற்றும் பாதுகாப்புமிக்க உணவைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் கல்முனை பிராந்தியத்தில் உள்ள வியாபார நிலையங்கள் உணவகங்களில் திடீர் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்றமுறைப்பாடுகளுக்கமைவாக கல்முனை பொதுச் சந்தை பகுதிகளில் நேற்று (வெள்ளிக்கிழமை) திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் போது பிராந்திய மேற்பார்வை பொதுச்சுகாதார பரிசோதகர் ஐ.எல்.எம்.லாபீர் தலையிலான பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற பழுதடைந்த உருளைக் கிழங்கு உட்பட உணவுப் பொருள்களும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதுடன் சுகாதார விதிமுறைகளை மீறி செயற்பட்ட



வர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டு திருத்த வழிமுறைகளுக்கு அமைவாக ஆலோசனைகளும் வழங்கப்பட்டது.



# ஆலய நிர்வாகத்தை எதிர்த்து கவனவீர்ப்புப் போராட்டம்

## புங்குடுதீவில் நேற்று பரபரப்பு

புங்குடுதீவு கண்ணகி அம்மன் ஆலய நிர்வாக சபையினருக்கு எதிராக நேற்று (வெள்ளிக்கிழமை) கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



வேலணை பிரதேச செயலகத்திற்கு முன்பாக புங்குடுதீவு மக்களால் நேற்று முற்பகல் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்ட பொது மக்கள், தற்போதைய நிர்வாகம் உடன் கலைக்கப்பட்டு புதிய நிர்வாகம் அமைக்கப்பட வேண்டும், கோவில் ஆன்மீக தலமா வியாபார நிலையமா? கோவில் களவு போனால் முறைப்பாடு செய்வது யாரிடம், பொலிஸ் முறைப்பாட்டை தலைவர் வாபஸ் வாங்க முற்பட்டது ஏன்? தடயங்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டுள்ளது, அம்மனுக்கு சேர்ந்த கோடிக்கணக்கான ரூபாக்களை விழுங்கியது யார்?, உள்ளிட்ட பல வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

பின்னர் போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களால் பிரதேச செயலாளரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த பிரதேச செயலாளர் -

எதிர்வரும் 29ஆம் திகதி ஆலய நிர்வாக சபையினர் மற்றும் போராட்டத்தை முன்னெடுத்த மக்களையும் அழைத்து இது தொடர்பில் கலந்துரையாடுவதாகத் தெரிவித்தார்.



காலைக்கதிர் Kalaikkathir

# வாழ்க்கையாளர்கள், ஊழியர்களுக்கு 3 கிலோ தங்கம் வழங்கிய நிறுவனம்

## குவைத் டிவிஎஸ் ஹைதர் குழும வெள்ளிவிழாவில் ஆச்சரியம்

(றிபாஸ்).

குவைத்தில் முன்னணி வணிகக் குழுமமாக இயங்கி வரும் டிவிஎஸ் ஹைதர் குழுமம், தனது 25ஆவது ஆண்டுவிழாவை அண்மையில் சிறப்பாகக் கொண்டாடியது. முத்துப்பேட்டையைச் சேர்ந்த தொழிலதிபர் டாக்டர் ஹைதர் அலி தலைமையில் செயற்படும் இந்த நிறுவனம், வாடிக்கையாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் நன்றி தெரிவிக்கும் விதமாக பலவித நிகழ்வுகளை நடத்தியது.

150 இற்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட இந்தநிறுவனத்தின்வெள்ளிவிழாவில், 1000வாடிக்கையாளர்களுக்கு பெறுமதியான பரிசுகள் வழங்கப்பட்டன. அதோடு, மூன்று கிலோ தங்கம் ஊழியர்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்களுக்கு வழங்கப்பட்டதோடு, டாக்டர் ஹைதர் அலியின் தனிப்பட்ட நெகிழ்ச்சியானசமூகப் பொறுப்பு உணர்வும் நிகழ்வின் முக்கிய அம்சமாக இருந்தது.

**விழாவில் இலங்கைச் சேர்ந்த ஊழியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.**

இந் நிகழ்வில், தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதியான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏகேஎஸ் விஜயன்,

தமிழக காவல் துறையின் முன்னாள் தலைமை இயக்குநர் அலெக்சாண்டர் ஐபிஎஸ், முன்னாள் மாவட்ட அமர்வு நீதிபதி முஹம்மது ஜியாவுதீன், ஊடகவியலாளர் மற்றும் அரசியல் ஆய்வாளர் முக்தார் அஹம்மது, நம் நாட்டின் பிரபல கவிஞரும், தமிழ்ச் சினிமா பாடலாசிரியருமான பொத்துவில் அஸ்மின் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

விழாவின் முக்கிய சிறப்பம்சம்களில் ஒன்றாக கவிஞர் பொத்துவில் அஸ்மின் எழுதிய கவிதை அரங்கில் வாசிக்கப்பட்டது. உணர்வூட்டும் அந்தக் கவிதை பெரும் வரவேற்பைப் பெற்றது. இதைத் தொடர்ந்து டாக்டர். ஹைதர் அலி அவரை பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

விழாவினை டுபாயை சேர்ந்த பிரபல தொகுப்பாளினி சாரா மற்றும் சேலம் ஆர்ஜே குட்டி பிரகாஸ் ஆகியோர் சிறப்பாக தொகுத்து வழங்கினர்.

இரண்டு நாள் நிகழ்விலும் பிரபல மாயஜால நிபுணர் விக்னேஸின் மாயஜால அரங்கேற்றம் காண்போரை வியக்கவைத்தது.

வணிக வெற்றியுடன் சமூகப் பொறுப்பையும் முன்னெடுத்து வரும் டிவிஎஸ் ஹைதர் குழுமத்துக்கு உலகமெங்கும் 30 கிளைகளை உள்ளன. ஹைதர் குழுமத்தின் இந்த விழா, தொழில்துறையில் சமூகத்தன்மையை நிரூபிக்கும் ஒரு முக்கிய நிகழ்வாக அமைந்துள்ளதோடு வளைகுடாவில் பேசும் பொருளாக மாறியுள்ளது.

## சம்மாந்துறை வைத்தியசாலையில் இம் மாதம் முதல் கிட்டிய சம்பளம்

(சகாதேவராஜா)

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் நிரந்தரமாக கணக்காளர் ஒருவர் நியமிக்கப்பட்ட காரணமாக இம் மாதம் முதல் அங்கேயே மாதாந்த சம்பளம் வழங்கப்பட்டது.

சம்மாந்துறைவைத்தியசாலையின்வரலாற்றில்முதல்தடவையாக பல சிரமங்களுக்கு மத்தியில் கணக்காளர் சீ.திருப்பிரகாசம் நியமிக்கப்பட்டதால் மே மாதத்திற்கான சம்பளம் முதல் முதலாக வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு முதல் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையூடாகவே சம்பளம் வழங்கப்பட்டு வந்தது.

வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் மருத்துவர் தர்மலிங்கம் பிரபாசங்கர் இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய சகல தரப்பினருக்கும் குறிப்பாகபிராந்தியசுகாதார சேவைகள் பணிப்பாளர் கணக்காளர் அலுவலக உத்தியோகத்தர்கள் . வலயக்கல்விப் பணிப்பாளர்-சம்மாந்துறை அணைவருக்கும் நன்றிகளை



வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



காலைக்கதிர் Kalaikkathir

# ஒரு வீட்டுக்கு இரண்டு காணி உறுதிகள் சபையில் உளறிய இளங்குமரன் எம்.பி.

யாழ்ப்பாணத்தில் உறுதிப்பத்திரங்கள் இல்லாத காணிகள் இருப்பதை போன்று ஒரு வீட்டுக்கு இரண்டு உறுதிப்பத்திரங்களை கொண்ட காணிகளும் காணப்படுகின்றன என நாடாளுமன்ற உறுப்பினர் கே. இளங்குமாரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர், 'யாழ்ப்பாணத்தில் அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்கின்றது.

இந்த மாவட்டமாவது 30 வருட யுத்தத்தை எதிர்கொண்டது. தென்பகுதியை விடவும் 30 வருடங்கள் பின்னாலேயே வடக்கு மாகாணம் இருக்கின்றது. இதனால் அந்த மாகாணத்தின் அபிவிருத்திக்கு அரசாங்கம் அதிகளவான நிதியை ஒதுக்கியுள்ளது.

கடந்த காலங்களில் ஆட்சி புரிந்தவர்கள் எவரும் வடக்கின் அபிவிருத்திக்கான இலக்குடன் செல்லவில்லை. இனவாதம் கதைத்துக்கொண்டே பயணித்தனர்.

ஆனால் இப்போது அரசாங்கம் அனைத்து இனங்களையும் உள்ளடக்கியதாக நாட்டின் அபிவிருத்தியை நோக்கி கொண்டு செல்கின்றது. இதேவேளை தமிழ் அரசியல்வாதிகள் மீண்டும் இனவாதத்தைதூண்டும்வகையில்செயற்படுகின்றனர்.

தேசிய மக்கள் சக்தி தொடர்பில் எதிர்க்கட்சிகள் போலி பிரசாரங்களை செய்தனர். ஆனால் நாங்கள் மக்கள் மத்தியில் பொய் பிரசாரங்களை செய்யவில்லை.

யாழ்ப்பாணத்தில் காணிப் பிரச்சினைகளால் மக்கள் பல இன்னல்களுக்கு உள்ளாகின்றனர். அவர்களுக்கு உறுதிப்பத்திரம் இல்லை. பலர் உறுதிகளை காணாமலாக்கியுள்ளனர். அதேபோன்று ஒரு வீட்டுக்கு இரண்டு உறுதிப்பத்திரங்கள் உள்ளன.

சட்டத்தரணிகள் சிலர் நுட்பமான முறையில் இரண்டு உறுதிப் பத்திரங்களை முடித்து நீதிமன்றத்தில் வழக்குகள் நடக்கின்றன.

அதேநேரம் யுத்த காலத்தில் சுவீகரிக்கப்பட்ட இடங்களைக்கூட அரசாங்கத்தின் உதவியுடன் இடங்களை பெற்றுள்ளனர். எதிர்காலத்தில் நாங்கள் மக்கள் காணிகளை மக்களிடமே ஒப்படைப்போம்.

இன்று அரச காணி எது தனியார் காணி எது என்று கண்டுபிடிக்க முடியாதுள்ளது. இதனை அடையாளப்படுத்தும்போது யாருடைய வீட்டையும் குடிமனைகளையும் சுவீகரிக்கப் போவதில்லை.

அவ்வாறு செயற்பட்டால் மீண்டும் இந்த நாட்டில் இன நல்லிணக்கம் ஏற்படாது. தங்களுடைய காணி அடையாளங்களுக்கான அத்தாட்சிப் பத்திரங்களை காட்டினால் அவர்களுக்கான உறுதிப்பத்திரங்களை வழங்கவே நடவடிக்கை எடுப்போம். - என்றார்.

## வெளிநாட்டுச் சிகரெட்டுகளுடன் கட்டுநாயக்கவில் இளைஞன் கைது

### 35 லட்சம் ரூபா பெறுமதியானது

சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட 35 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரட்டுகளுடன் இளைஞன் ஒருவன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய பொலிஸ் அதிகாரிகளால் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் யட்டியாந்தோட்டைப் பகுதியில் வசிக்கும் 21 வயதுடையவர் ஆவார்.

விமானநிலையசோதனைகள் அனைத்தையும் முடித்துவிட்டு விமான நிலையத்தை விட்டு வெளியேறும் போது கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் இந்தக் கைது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டவரின் பயணப்பொதிகளில் இருந்து 20,000 'பிளாட்டினம்' சிகரெட்டுகள் மற்றும் 3,600 'மான்செஸ்டர்' சிகரெட்டுகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட பயணியையும் சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட சிகரெட்டுகளையும் வியாழக்கிழமை நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.



## வவுனியா மாநகரசபையால் அங்காடி வியாபாரக் கொட்டகைகள் அகற்றம்

வவுனியா மாநகரசபையால் பழைய பேருந்து நிலையத்திற்கு அருகில் காணப்பட்ட அங்காடி வியாபார கொட்டகை நேற்றையதினம் (வெள்ளிக்கிழமை) அகற்றப்பட்டது.

வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள தனிநாயகம் அடிகளாரின் சிலை அருகே செருப்பு தைக்கும் அங்காடி வியாபார கொட்டகையில், இரவு வேளைகளில் தவறான நடவடிக்கை இடம்பெறுவதாகவும், அதனை சுற்றியுள்ள பகுதிகளை சுகாதார சீர்கேட்டிற்குட்படுவதாக அப்பகுதி வர்த்தகர்கள், பொதுமக்களின் முறைப்பாடுகளிற்கு அமைவாகவே குறித்த கொட்டகை அகற்றப்பட்டதுடன் பிறிதொரு இடம் தற்காலிகமாக வழங்கப்பட்டிருந்தது.

மேலும் இத்தொழிலில் ஈடுபட்ட விசேட தேவைக்குட்பட்ட பெண்ணிற்கு, விசேட தேவைக்குட்பட்டவர்களை பராமரிக்கும் காப்பகத்தில் இணைப்பதற்கான நடவடிக்கையினை மாநகரசபை வருமான பரிசோதகரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பெருந்தொகை பீடி இலைகளுடன் வென்னப்புவவில் 7 பேர் கைது

புத்தளம் - வென்னப்புவ பகுதியில் பெருந்தொகை பீடி இலைகளுடன் 7 பேரை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

லொறியொன்றில் கொண்டு செல்லப்பட்ட 1100 கிலோ நிறையுடை பீடி இலைகளை பறிமுதல் செய்த பொலிஸார், சம்பவத்துடன் தொடர்புடைய 7 பேரை கைதுசெய்துள்ளனர்.

லொறி, வான் மற்றும் பீடி இலைகளுடன் கைதுசெய்யப்பட்ட 7 பேரையும் பொலிஸ் நிலையித்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.






# வரணியில் உரக்கூட்டுத்தாபனக் கட்டடத்தில் பனைசார் உற்பத்திநிலையம் அமைக்க திட்டம்

(சுபேசன்)

தென்மராட்சி-வரணிப் பகுதியில் நீண்ட காலமாக பயன்பாடற்ற நிலையில் காணப்படுகின்ற இலங்கை உரக்கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமானகட்டடத்தில் பனை சார்ந்த உற்பத்தி மற்றும் விற்பனை நிலையம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை பனை அபிவிருத்திச்சபை முன்னெடுத்து வருவதாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் வி.சகாதேவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்; -

தென்மராட்சி வரணிப் பிரதேசத்தில் இலட்சக்கணக்கான பனை மரங்கள் இருந்தும் அவை முழுமையாக உற்பத்திக்குப் பயன்படுத்தப்படாத நிலை காணப்படுகின்றது.

இந் நிலையில் தேசிய மக்கள் சக்தியின் தென்மராட்சி இணைப்பாளர் பிரகாஷ் மற்றும் வரணி முதலாம் வட்டார பிரதேசசபை உறுப்பினர் ஞானநிரோஜன் ஆகியோர் அரச வளங்களை உச்ச பயன்பாட்டிற்கு உட்படுத்தல் எனும்





தேசிய கொள்கைக்கு அமைவாக மேற்படி உரக் களஞ்சியத்தை பனை அபிவிருத்திச்சபைக்கு அடையாளம் காட்டியிருந்தனர்.

தற்போதுபனைசாந்தஉற்பத்திப்பொருள்களுக்கு சந்தைவாய்ப்பு அதிகமாக காணப்படும் நிலையில் பயன்படுத்தப்படாத உரக் களஞ்சியத்தை பனை சார்ந்த உற்பத்தி மற்றும் விற்பனை நிலையமாக மாற்ற பனை அபிவிருத்திச்சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அதனடிப்படையில் தேசிய உரக்கூட்டுத்தாபனத் தலைவருடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.அடுத்த கட்டமாக அதற்கான திட்ட அறிக்கைதயாரிக்கப்பட்டு உரியஅனுமதியுடன்முதலீட்டாளர்களுடையபங்களிப் புடன் கட்டடத்தை புனரமைத்து மக்கள் பயன்பாட் டிற்கு கொண்டுவர திட்டமிட்டுள்ளோம்.

இந்தநடவடிக்கைமூலம்வரணிப்பிரதேசத்தில்உள்ள பனைவளங்களைமுழுமையாகபயன்படுத்தமுடியும். அத்துடன் வரணிப் பிரதேச இளைஞர்கள் மற்றும் பெண்கள் ஆகியோர் தொழில்வாய்ப்புக்களைப் பெற முடியும் எனவும் மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# சட்டவிரோதமான சிகரெட்டுகளுடன் வாழைச்சேனையில் ஒருவர் கைது

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாஞ்சோலை பகுதியில், சட்டவிரோத சிகரெட்டுக்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் சிறப்பு அதிரடிப்படை முகாமைச் சேர்ந்த அதிகாரிகள் குழுவிற்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த நபர் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர், வாழைச்சேனை பகுதியைச் சேர்ந்த 42 வயதுடையவர் ஆவார்.

கைதான சந்தேக நபர் மற்றும் அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட 920 சட்ட விரோத சிகரெட்டுகள் வாழைச்சேனைபொலிஸ்நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# கஞ்சா தோட்டம் சுற்றிவளைப்பு கதிர்காமத்தில் நால்வர் கைது

கதிர்காமம் பொலிஸ் பிரிற்குட்பட்ட யாலகாட்டுப்பகுதியில்,சட்டவிரோதமாக முன்னெடுக்கப்பட்ட கஞ்சா பயிர்ச்செய்கையை சுற்றிவளைத்த பொலிஸார் அங்கிருந்த நால்வரை கைது செய்துள்ளனர்.

சியம்பலாண்டுவ பொலிஸ் சிறப்பு அதிரடிப்படை முகாமைச் சேர்ந்த அதிகாரிகள் குழுவும் கதிர்காமம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த அதிகாரிகள் குழுவும் இணைந்து மேற்கொண்ட 05 சுற்றிவளைப்புக்களின் போதே இவர்கள் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள், தனமல்வில மற்றும் தெனகம பகுதிகளைச் சேர்ந்த 25 முதல் 53 வயதுக்குட்பட்டவர்கள் ஆவர்.

சந்தேக நபர்களிடம் இருந்து, சட்டவிரோதமாக பயிரிடப்பட்ட 68,830 கஞ்சா செடிகள், 02 சட்ட விரோத உள்நாட்டுத்துப்பாக்கிகள், 02 கையடக்கத் தொலைப்பேசிகள் மற்றும் 02 சிம் அட்டைகள் ஆகியன பொலிஸாரால்கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்துகைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைக ளுக்காக கதிர்காமம் பொலிஸ் நிலையத் தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கதிர்காமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாறையில் போதைப்பொருள் விநியோகிக்கும் பிரதான நபர் கைது

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை பிரதேசத்துக்கு போதைப் பொருள் விநியோகித்ததாக சந்தேகிக்கப்படும்நபரை அம்பாறை தலைமையக பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை நகரில் நேற்று (வெள்ளிக்கிழமை) 40 கொகைன் போதைப் பொருள் பாக்கெட்டுகளுடன் நடமாடிய சந்தேக நபரை விசேட சோதனை நடவடிக்கையின்போது அம்பாறை பொலிஸ் தலைமையக ஊழல் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

மேலும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் அம்பாறை நகருக்கு குறித்த போதை பொருளை கொண்டு வந்து விநியோகம் செய்யும் பிரதான சந்தேக நபராக அடையாளம் காணப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.





அத்துடன் போதைப்பொருள் மற்றும் ஐஸ் வலையமைப்பு தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பாறை தலைமையக பிரதான பொலிஸ் பொறுப்பதிகாரி அசேல கே. ஹேரத்தின் மேற்பார்வையின் கீழ் ஊழல் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

## புத்தளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களம் வீதி அதிகாரசபை மற்றும் ஏனைய தரப்பினருடன் கலந்துரையாடி, இந்த வீதியை பயன்டுத்த முடியுமான ஒரு இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

## தொழில்நுட்ப....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார். இதற்கமைய தேர்தலை நடத்தும் வகையில் சட்டமூலத்தை தயாரிக்க மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு ஏதேனும் நடவடிக்கைகளை எடுத்துள்ளதா? இருந்தால் எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன? நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லையாயின் ஏன் எடுக்கவில்லை?

மாகாண சபைகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மாத்திரமல்ல அனைத்து மாகாணங்களுக்கும் முக்கியமானது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு தனிநபர் பிரேரணை ஒன்றை கொண்டு வந்தார். இருப்பினும் அந்தப் பிரேரணை நிறைவேற்றப்படவில்லை. இதுவொரு முக்கியமான விடயம். ஆகவே இந்தக்கேள்விகளுக்குப்பதிலளிக்கவேண்டும்“ என்று மாகாணசபைகள்மற்றும்உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சரிடம் கோரினார்.

இதற்குப் பதிலளித்த மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்ததாவது:

மாகாண சபைகள் தேர்தலை நடத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மாகாண சபைத் தேர்தல் விவகாரத்தில் சட்ட ரீதியான ஒரு சில தீர்மானங்களை மேற்கொள்ளவேண்டும்.ஆகவேஇதற்கமைய அமைச்சு மட்டத்தில் ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சிமன்ற அதிகார சபைகள் தேர்தலை நடத்துவதற்கு கடந்த மாதங்களில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குரிய ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் அமைச்சு சார் மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பில் முன்னாள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற அமைச்சர் பைஸர் முஸ்தபா முன்வைத்த திருத்த யோசனை மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் முன்வைத்த தனிநபர் பிரேரணை குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மாகாண சபைகள் தேர்தலை விரைவாக நடத்தவேண்டும் என்று எமது தேர்தல் அறிக்கையிலும்குறிப்பிட்டுள்ளோம். மக்களின் ஜனநாயகஉரிமைகளைபாதுகாக்கவேண்டிய பொறுப்பு ஆளும்தரப்புக்கு உண்டு.

தொழில்நுட்ப ரீதியில் மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். அதுவரையில் மாகாண முறைமைக்கு அமைய மாகாண சபைத் தேர்தலை நடத்தி நிர்வாக கட்டமைப்பை ஸ்தாபிக்க துரிதகர நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

## 178 உள்ளூராட்சி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த பதவி காலம் ஆரம்பமாகவுள்ளது. அதற்கமைய 161 உள்ளூராட்சிமன்றங்களில் மேயர்கள், பிரதி மேயர்கள், தவிசாளர்கள், பிரதித் தவிசாளர்களை நியமிப்பதில் எவ்வித சிக்கலும் இல்லை. எனவே அவை தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் தேர்தல் ஆணைக்குழுவால் வெளியிடப்படும்.

எவ்வாறிருப்பினும் எந்தவொரு தனி கட்சியும் பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ளாத 178 உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர்களை விரைவில் பெயர் குறிப்பிட்டு, தெரிவத்தாட்சி அலுவலகங்களுக்கு அறிவிக்குமாறு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களிடம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இந்த உள்ளூராட்சிமன்றங்களுக்கான மேயர்கள், பிரதி மேயர்கள், தவிசாளர்கள், பிரதித் தவிசாளர்கள் உள்ளூராட்சி மன்ற ஆணையாளர்கள் தலைமையில் வெற்றி பெற்ற உறுப்பினர்களுக்கு இடையில் இடம்பெறும் கலந்துரையாடலின்போதே தெரிவு செய்யப்படுவர். இதற்குக் குறித்த உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவான உறுப்பினர்கள் யார் என்பது தொடர்பான தகவல்கள் தேவையாகும்.

அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் இந்தத் தகவல்களை வழங்கினால் மாத்திரமே எம்மால் இது குறித்து வர்த்தமானி அறிவித்தல் மூலம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கமுடியும்என ஆணையாளர்நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க மேலும் தெரிவித்தார்.

## 20 ரில்லியன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் மற்றும் வெளிநாட்டுக் கடன்கள் (நீக்குதல்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பு என்ற அடிப்படையில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கடன் பெற்றுக்கொள்ள முடியும். ஆளும்தரப்பு பிணையாக நிற்க, அரச நிறுவனங்கள் சர்வதேச பிணைமுறியங்களில் இருந்து கடன் பெற்றுக்கொள்ளும் வசதிகளும் காணப்படுகின்றன. அத்துடன் நிறுவன கட்டமைப்பின் ஊடாக வெளிநாட்டு நிறுவனங்களில் கடன் பெற்றுக்கொள்ள முடியும்.

கடன்பெறுகையின்போது வெளிப்படைத் தன்மை மற்றும், முறையான கணக்காய்வு அத்தியாவசியமானது. இருதரப்பு மற்றும் பல்தரப்பு கடன்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. கடன் பெறுவதைபோன்று, கடன்முகாமைத்துவமும் அத்தியாவசியமானது.

கடந்த காலங்களில் எவ்விதமாக வரையறைகளுமில்லாமல் வெளிநாட்டு அரசமுறைகடன்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. பெற்றுக்கொள்ளப்படும் கடன்களினால் செயற்படுத்தப்படும் கருத்திட்டம் என்ன, அந்த கருத் திட்டத்தால் வினைத்திறனான பிரதிபலன்கள் கிடைக்கப்பெறுமா என்பது முறையாக ஆராயப்படவில்லை. பெற்றுக்கொள்ளப்படும் கடன்களையும் கொள்ளையடிக்கும்கலாசாரமேகாணப்பட்டது.

2026 ஆம் ஆண்டு முதல் காலாண்டளவில் அரச நிதி முகாமைத்துவ காரியாலயம் ஸ்தாபிக்கப்பட்டு, நிதி விவகாரங்கள் குறித்து புதிய திட்டங்கள் செயற்படுத்தப்படும். மத்திய வங்கியின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்படும். கடந்த காலங்களில் பெற்றுக்கொண்ட அரசமுறை கடன்களுக்கு நேர்ந்தது என்னவென்பது இன்று கணக்காய்வாளர் திணைக்களத்தால் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளன.

பெற்றுக்கொண்டுள்ள வெளிநாட்டு அரசமுறை கடன்களில் சுமார் 20 ரில்லியன் ரூபாய் வரையிலான நிதிக்கு என்னவாயிற்று என்பதற்குரிய ஆவணங்கள் மற்றும் குறிப்புகள் ஏதும் கிடையாது.இவ்விடயம் குறித்து கணக்காய்வு திணைக்களம் ஊடாக விசேட நடவடிக்கைகள் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும்.

பெற்றுக்கொண்ட அரசமுறை வெளிநாட்டு கடன்கள் முறையாக முகாமைத்துவம் செய்யப்பட்டு கணக்காய்வுக்குட்டு, பொதுமக்களுக்குவெளிப்படைத்தன்மையுடன் தரவுகள் பகிரங்கப்படுத்தப்பட்டிருந்ததால் இந்த நாடு நிதியியல் ரீதியில் வங்குரோத்து நிலையடைந்திருக்காது - என்றார்.

## ரூ. 2 கோடி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகத்துக்குரிய முச்சக்கரவண்டியொன்றை நிறுத்தி சோதனைக்கு உட்படுத்திய போதே குறித்த பணம் மீட்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

மேலும் சந்தேகநபர்கள் தம்மை விடுவிக்குமாறு பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்தனர் என்றும் அதற்காக மீட்கப்பட்ட பணத்தில் 5 இலட்சத்தை இலஞ்சமாக வழங்குவார்கள் என்று தெரிவித்தனர் என்றும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார். எனினும் போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த குறித்த பொலிஸார் அவர்களைக் கைதுசெய்து பணத்தையும் தமது பொறுப்பில் எடுத்துள்ளனர்.

கடல் மார்க்கமாக சட்டவிரோதமான முறையில் ஒருதொகை போதைப்பொருளை நாட்டுக்கு எடுத்து வருவதற்காக வழங்கப்பட்ட பணம் இதுவென ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் மேலும் தெரிவித்தார். சம்பவம் தொடர்பில் சிலாபம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## ஆடிவேல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உவந்தை ஊடாக கதிர்காமத்துக்கு யாத்திரிகள் நடைபவணியாக செல்வார்கள். இது இந்துக்களின் பாரம்பரிய வழிபாட்டு முறையாகும். இம்முறை ஆடிவேல் திருவிழா, ஆனிவேல் திருவிழாவாக மாற்றப்பட்டுள்ளது. திருவிழாஉற்சவம்ஒருமாதத்துக்குமுன்னதாக மாற்றப்பட்டுள்ளது. இந்துக்களின் மனதை புண்படுத்தும் ஒரு செயலாகவே இதனைப் பார்க்கிறோம் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் திகாமடுல்லை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற குற்றவியல் நடவடிக்கைமுறைச்சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் மற்றும் வெளிநாட்டுக் கடன்கள் (நீக்குதல்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்து 8 மாதங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் பொருளாதார மீட்சிக்கு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? ஏற்றுமதி பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு சிறந்த திட்டங்களை செயற்படுத்தாமல் இருப்பது கவலைக்குரியது. சமூக கட்டமைப்பில் இருந்து ஏழ்மையை இல்லாதொழிப்பதற்கும், பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கும் வெளிநாடுகளில் இருந்தும், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெறுவதும் நிலையான தீர்வாக அமையாது.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் மக்களின் மீது சுமையை சுமத்தும் சூழலே காணப்படுகிறது. கடந்த அரசாங்கங்களின் குறைப்பாடுகளை பழைய பல்லவியை போன்று திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருக்காமல் நாட்டின் அபிவிருத்தி, உற்பத்தி திறன் ஆகியவற்றில் அதீத கவனம் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்துக்கள் காலம் காலமாக தொன்றுத்தொட்டு கடைப்பிடித்து வரும் கலாசாரம் மற்றும் மத வழிபாடுகளை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். மதிப்பளிக்கவேண்டும். கதிர்காமபாதயாத்திரை அதாவது செல்வ சந்நிதியில் இருந்து உவந்தை ஊடாக கதிர்காமத்துக்கு யாத்திரிகள் நடைபவணியாக செல்வார்கள். இது இந்துக்களின் பாரம்பரிய வழிபாட்டு முறையாகும்.

இம்முறை ஆடிவேல் திருவிழா, ஆனிவேல் திருவிழாவாக மாற்றப்பட்டுள்ளது. திருவிழா உற்சவம் ஒருமாதத்துக்கு முன்னதாக மாற்றப்பட்டுள்ளது. இந்துக்களின் மனதை புன்படுத்தும் ஒரு செயலாகவே இதனைப் பார்க்கிறோம். நேரகால அடிப்படையில்தான் யாத்திரிகர்கள் கதிர்காமத்துக்குக் காட்டு வழியூடாகச் செல்கிறார்கள்.

அம்பாறை மாவட்டச் செயலருடனோ அல்லது அம்பாறை மாவட்டத்தில் உள்ள மத தலைவர்களுடனோ கலந்துரையாடாமல், கண்டியில் உள்ள மத மலைவர்களுடனும் பிற தரப்பினருடனும் மட்டும் கலந்துரையாடி ஆடிவேல் திருவிழாவின் காலம் மாற்றப்பட்டுள்ளது. இன, மத பாகுபாடு இருக்கக்கூடாது என்று குறிப்பிடுகின்றீர்கள். ஆனால் மீண்டும், மீண்டும்தவறிழைக்கப்படுகிறது. இவ்வாறான தவறுகளை திருத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## பிமல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள்சக்தியின்உறுப்பினர்கள்சபாநாயகரிடம் எழுத்துமூலமாக வலியுறுத்தியுள்ளனர். சபாநாயகரிடம் இது தொடர்பாக அவர்கள் நேற்று ஒரு கடிதத்தை வழங்கினர். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2025.05.20ஆம்திகதியன்றுநிலையியல் கட்டளை 92(2) ஆ, பிரகாரம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பில் சபாநாயகரின் அனுமதியுடன் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர சபையில் உரையாற்றினார்.

இதனைத் தொடர்ந்து எழுந்து உரை யாற்றிய ஆளும் தரப்பின் உறுப்பினர் கௌசல்யா ஆரியரத்ன சபாநாயகர் வழங்கிய அனுமதி மற்றும் நிலையியல் கட்டளையை கேள்விக்குட்படுத்தினார். இச்சந்தர்ப்பத்தில் சபை முதல்வர் பிமல் ரத்னாயக்க தகாத வார்த்தைகளை பயன்படுத்தித் தயாசிறி மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்து உரையாற்றினார். இவரது கூற்றுக்கள் நிலையியல் கட்டளை 91( உ) பிரிவுக்கு முரணானது.

10ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் ஆரம்பமான தினத்தில் இருந்து சபை முதல்வரின் செயற்பாடுகள் மற்றும் நடத்தைகள் கடந்த கால நாடாளுமன்றத்தின் சபை முதல்வர்களின் நன்நடத்தைகளுக்கு முற்றிலும் விரோதமானது. ஆகவே 2025.05.20 ஆம் திகதியன்று சபை முதல்வர் சபையில் நடந்துக் கொண்ட விதம் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுங்கள் - என்றுள்ளது.

## அமைச்சர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்ற கருத்தைக் கூறியுள்ளார். இதனை நானும் அவதானித்தேன். இது இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்திற்குப் பாதகமான கருத்து. இதனைஒருபோதும்அனுமதிக்கமுடியாது. ஆளும்தரப்பின் நகைப்புக்கிடமான, கேலிக்கூத்தான மனநிலையை இந்த கூற்று வெளிப்படுத்துகின்றது.

வெளிவிவகாரத்துறை அமைச்சர் என்பவர் சர்வதேசத்திற்கு பதில் சொல்லக்கூடியவர். ஆகவே அவர் இவ்வாறான கருத்துக்களை தெரிவித்திருக்கக்கூடாது. இனப்படுகொலை குற்றச்சாட்டைஎதிர்க்கொள்ள இலங்கைக்கு முதுகெலும்பு இல்லை. அதனால்தான் இவ்வாறான பிழையான நிலைப்பாட்டை எடுத்துள்ளது. இனப்படுகொலைஎன்பதுஒரு குற்றம். இலங்கைரோம்உடன்படிக்கைக்கு கூட உடன்படவேண்டும்.

இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றுள்ளது. அது ஒரு மிகப்பெரிய குற்றம். ஆனால் இனப்படுகொலை என்று கூறினால் சட்ட நடவடிக்கை என நிலைப்பாட்டில் ஆளும்தரப்பு உள்ளது. முந்தைய ஆட்சியாளர்களைக் காட்டிலும் நாம் மாறுபட்டவர்கள் எனக் கூறும் தற்போதைய ஆட்சியாளர்களின் செயற்பாடுகள் தொடர்பில் நாம் யோசிக்க வேண்டியுள்ளது.

இனப்படுகொலைதொடர்பில்வழக்குகள் நடக்கவேண்டும். பாதிக்கப்பட்டவர்களினால் வழக்குகள் சுயாதீனமாக தாக்கல் செய்யப்பட வேண்டும். இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றுள்ளதாகக் கூறுபவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்று குறிப்பிட்ட கருத்தைவெளிவிவகாரத்துறைஅமைச்சர் உடனடியாக வாபஸ் பெறவேண்டும். இந்தக் கருத்து அவர் பதவி வகிக்கும் அமைச்சுக்கும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது.

இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றுள்ளது. அது தொடர்பில் உங்களால் ஏன் நீதியை நிலைநாட்ட முடியவில்லை? உங்களிடமும் ஒரு குற்றவுணர்வு இருப்பதனால்தான் நீங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே ஆளும்தரப்பு தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டும் - என்றார்.

## மின் கட்டணம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேவை ஏற்பாடாதென நம்புகிறோம் என்று நகர அபிவிருத்தி நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர் அனுர கருணாதிலக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நீர் கட்டணம் அதிகரிப்பது தொடர்பில் முன்வைத்த கூற்றொன்றுக்கு பதிலளிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

“ஆளும்தரப்பு மின்சார கட்டணத்தை 33 சதவீதம் குறைப்பதாக மக்களுக்கு வாக்களித்திருந்தது. ஆனால் தற்போது நூற்றுக்கு 18 சதவீதம் மின கட்டணத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

மின்சார கட்டணத்தை அதிகரிப்பதற்கு தீர்மானித்துள்ளது போன்று அதற்கு நிகராக குடிதண்ணீர்கட்டணத்தையும்அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக அறியக் கிடைக்கிறது. சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டுகு அமைவாகவா இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது என கேட்கிறேன்?“ என்று எதிர்க் கட்சித் தலைவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதன்போதுஒழுங்குப்பிரச்சினைஒன்றை எழுப்பி, விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் அனுர கருணாதிலக்க எழுந்து, “மின் கட்டண அதிகரிப்புக்கு நிகராகக் குடிதண்ணீர்க் கட்டணம் அதிகரிக்கப்பட இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்திருந்தார். அவர் இந்த தகவலை எந்த மூலாதாரத்தின் அடிப்படையில் தெரிந்துகொண்டாரென கேட்கிறேன்“ என்றார்.

அதற்கு சஜித் பிரேமதாச பதிலளிக்கையில், ‘‘ஆளும்தரப்பு மின் கடட்டணத்தை அதிகரிப்பதற்கு எடுத்த தீர்மானத்தை, ஆளும்தரப்பு நாட்டு க்கு அறிவிப்பதற்கு முன்னர் நாங்களே அறிவித்தோம். எங்களுக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் நாங்கள் அதனை அறிவித்திருந்திருந்தோம். அதேபோன்று தற்போது ஆளும்தரப்பு மின்கட்டணத்தை அதிகரிப்பதற்கு திர்மானித்திருப்பது போன்று, அதற்கு நிகராக நீர்கட்டணத்தையும்அதிகரிக்கும்எனநாங்கள் அனுமானிக்கிறோம். அதனால் ஆளும்தரப்பு தண்ணீர்க்கட்டணத்தைஅதிகரிக்கப்போகிறதா அல்லது குறைக்கப்போகிறதா என்றே கேட்கிறேன்“ என்றார் சஜித் பிரேமதாச.

அதற்குப் பதிலளித்த அமைச்சர், “குடிதண்ணீர் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில்அமைச்சுமட்டத்தில்இதுவரைஎந்தக் கலந்துரையாடலும்மேற்கொள்ளப்படவில்லை. அதேநேரம் குடிதண்ணீர்க் கட்டணத்தை அதிகரிப்பதற்கு எங்களுக்கு தேவை ஏற்படா தென நம்புகிறோம்“ என்றார்.

## போக்குவரத்துத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்படுத்தப்பட்டபோது அவர்களை ஜூன் 6 வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இலஞ்சமாக பெற்றதாக நம்பப்படும் 4 மில்லியன் ரூபா பணத்தை வைத்திருந்தமை தொடர்பில் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கூறப்படுகின்றது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# அம்பிட்டியே சுமணரத்ன தேரர் பிணையில் விடுவிப்பு.

(பாறுக் ஷிஹான்)

பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்து குழப்பநிலைமையினை தோற்றுவித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அம்பிட்டியே சுமணரத்ன தேரர் இரண்டு லட்சம் ரூபா மதிப்புள்ள இரண்டு சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

அம்பாறை மாவட்டத்தின் பண்டாரடுவ பொலிஸ் நிலையத்தில் உட்புகுந்து மட்டக்களப்பு மங்களாராம விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் நேற்று (வெள்ளிக்கிழமை) பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்து குழப்ப நிலைமையினை தோற்றுவித்த குற்றச்சாட்டில் அம்பாறை மாவட்ட பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

இதன் போது அம்பாறை மாவட்டத்தின் பண்டாரடுவ பொலிஸ் நிலையத்தில் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்து குழப்ப நிலைமையினை தோற்றுவித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட் அவர், அம்பாறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது அம்பாறை நீதிமன்ற நீதிவான் நவோமி விக்ரமரத்னவால் தலா இரண்டு லட்சம் ரூபா மதிப்புள்ள இரண்டு சரீரப் பிணைகளில் விடுதலை செய்யப்பட்டார்.

அம்பிட்டியே தேரரின் உறவு முறையான நபரின் இரண்டு பிள்ளைகள் பாடசாலையில் இருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது பொலிஸார் மோட்டார் சைக்கிளை சோதனை செய்தனர். பின்னர் 2 பிள்ளைகளின் தந்தை அங்கு திடிரென மயக்கமடைந்ததால் அவர் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டதுடன் இரண்டு பிள்ளைகளையும் அவ்வீதியினால் வந்த ஒரு ஓட்டோவில் ஏற்றி வீட்டிற்கு அனுப்பி இருந்தனர்.மேலும் இரண்டு பிள்ளைகளும் சரியான நேரத்தில் வீடு திரும்பாததால் அம்பிட்டியே சுமனரத்ன தேரர் இரண்டு குழந்தைகளையும் கேட்டு விசாரிப்பதற்காக பண்டாரதுவ பொலிஸ் நிலையத்திற்குச் சென்றதுடன் அங்கு பிள்ளைகளை அடையாளம் தெரியாத ஓட்டோ சாரதியிடம் ஒப்படைத்த பொலிஸ் அதிகாரிகளை திட்டியுள்ளார்.

பின்னர் அம்பிட்டியே சுமனரத்ன தேரர் பொலிஸாரின்கடமைக்குஇடையூறுவிளைவித்து குழப்ப நிலைமையினை தோற்றுவித்த குற்றச்சாட்டில்கைது செய்யப்பட்டு அம்பாறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் இரண்டு லட்சம் ரூபா மதிப்புள்ள இரண்டு சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டார். அத்துடன் குறித்த வழக்கு விசாரணை எதிர்வரும் ஜூன் 17 ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.



பிணையில் விடுவிக்கப்பட்ட அம்பிட்டியே சுமனரத்ன தேரர் ஊடகங்களுக்கு பின்வரும் கருத்துக்களைத் தெரிவித்தார்.

இரண்டு பிள்ளைகளை அழைத்துச் செல்லச் சென்ற எனது உறவு முறையானவர் பண்டாரதுவ பொலிஸ் நிலைய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தார். அவர் தவறு செய்ததால் கைது செய்யப்பட்டார். ஆனால் பொலிஸார் பிள்ளைகளை முறையாக உரிமையாளர்களிடம் திருப்பி அனுப்பியிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை.

பிள்ளைகள் அடையாளம் தெரியாத ஓட்டோவில் பொலிஸாரால் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இது முற்றிலும் தவறு. அங்கே 11 வயதில் ஒரு மகளும், ஆறு வயதில் ஒரு மகனும் இருந்தனர். முச்சக்கர வண்டி சாரதி வீட்டிற்குச் சென்று பிள்ளைகளின் தாயிடம் ஒப்படைத்ததாகக் கூறுகிறார்.ஆனால் தாய் வெளி நாட்டில் இருக்கிறார். பொலிஸ் அதிகாரிகள் சிறு பிள்ளைகளுடன் விளையாட அனுமதிக்கப்படக்கூடாது. குழந்தைகள் பாதுகாப்புச் சட்டம் பற்றியும் எங்களுக்குத் தெரியும். இந்த இரண்டு அதிகாரிகள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். - என்றார்.

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

# 11 மாணவர்களை தாக்கி காயப்படுத்திய பௌத்த துறவி பிணையில் விடுவிப்பு

(பாறுக் ஷிஹான்)

11 மாணவர்களை பிரம்பால் தாக்கி காயப்படுத்திய குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட பாடசாலை முதல்வரான பௌத்த துறவியை தலா ஐந்து லட்சம் ரூபா மதிப்புள்ள இரண்டு சரீரப் பிணைகளில் செல்ல அம்பாறை நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.

அம்பாறை நகர பாடசாலை ஒன்றில் கடந்த மே 16 ஆந் திகதி மாலை தரம் 5 மாணவர்கள் 11 பேரின் பெற்றோர்கள் பாடசாலை அதிபரான பௌத்த துறவி கொடூரமாகத் தாக்கியதாக குற்றச்சாட்டினை முன்வைத்திருந்தனர்.

இதற்கமைய அம்பாறை வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் அம்பாறை மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் குறித்த மாணவர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டதுடன் தாக்குதலினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் மீதான வைத்திய அறிக்கைகள் பெறப்பட்ட நிலையில் நேற்று 11 மாணவர்களை கொடூரமாகத் தாக்கிய சந்தேக நபரான வணக்கத்திற்குரிய சுஹதகம சிலாரத்தன தேரர் பின்னர் அம்பாறை மகளிர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்தத் தாக்குதல் குறித்து அம்பாறை சிறுவர் மறுவாழ்வு மையம் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் கல்வித் துறையும் காவல்துறையும் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில் சந்தேக நபரை நேற்று அம்பாறை சிறுவர் மற்றும் மகளிர் பணியக பிரதம பொறுப்பதிகாரி தயானி கமகே கைது செய்தார்.

பின்னர் அம்பாறை நீதிமன்ற நீதவான் நவோமி விக்ரமரத்ன முன்னிலையில் சந்தேக நபர் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் தலா ஐந்து லட்சம் ரூபா மதிப்புள்ள இரண்டு சரீரப் பிணைகளில் அவர் விடுவிக்கப்பட்டதுடன் மறு விசாரணை எதிர்வரும் ஜூன் 25 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மேலும் அம்பாறை மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சனத் அமரசிங்கவின் அறிவுறுத்தலின் பேரில் அம்பாறை சிறுவர் மற்றும் மகளிர் பணியக பிரதம பொறுப்பதிகாரி தயானி கமகே உள்ளிட்ட அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த 15 ஆம் திகதி அன்று பாடசாலை நேரத்திற்கு பின்னர் பிரத்தியேக வகுப்புகள் நடைபெற்றன. இதன் போது அன்றைய தினம் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட இடைவேளையின் போது கழிப்பறைக்குச் சென்ற பல மாணவர்கள் தண்ணீர் விசிறி சிறு விளையாட்டில் ஈடுபட்டதாக வகுப்பு ஆசிரியரால் பாடசாலை அதிபருக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. இதற்கமைய மறுநாள் 16.05.2025 அன்று பிற்பகல் சுமார் 3.00 மணியளவில் பாடசாலை அதிபரான பௌத்த துறவி தனது கையில் மூன்று பிரம்புகளை எடுத்து 11 மாணவர்களையும் வரவழைத்து முழங்காலில் நிற்க வைத்து அவர்களின் கைகளை சுவரில் வைத்து பிரம்புகள் உடையாத அளவுக்கு மாணவர்களின் முதுகில் கொடூரமாக அடித்துள்ளதாக பெற்றோர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.






# கிராம மட்ட அமைப்புக்களை வலுவூட்டும் கிறிசலிஸ் பங்களிப்பு பாராட்டுதற்குரியது

## மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் வாகீசன் தெரிவிப்பு

(சுபேசன்)



கிராமமட்ட அமைப்புக்களை வலுவூட்டுகின்ற கிறிசலிஸ் நிறுவனத்தின் பங்களிப்பு பாராட்டுதற்குரியது என வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சினுடைய செயலாளர் பொ.வாகீசன் தெரிவித்துள்ளார்.

கிறிசலிஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றஊராட்சிமுற்றக்கலந்துரையாடலில்தலைமையுரை ஆற்றும் போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்; -

யாழ் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் 51சதவிகிதத்திற்கும் அதிகமாக பெண் பிரதேச செயலர்களே உள்ளனர்.

அதைவிட விசேடமாக மாகாண பிரதம செயலாளராக திருமதி தனுஜா அவர்கள் பதவியேற்றுள்ளார். விசேடமாக பெண்களை வலுவூட்டும்,கிராம மட்ட அமைப்புக்களை வலுவூட்டும் செயற்பாட்டில் கிறிசலிஸ் நிறுவனம் முன்னின்று செயற்படுகிறது.

சமூகத்தில் தீர்க்கப்படப்படாத பிரச்சினைகளை தீர்க்கும் களமான ஊராட்சி முற்றக் கலந்துரையாடல்களை கிறிசலிஸ் நிறுவனம் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது.

மாவட்ட ஊராட்சிமுற்றக் கலந்துரையாடல்களை பிரதேச மட்டத்திலும் முன்னெடுக்க வேண்டும். இதனூடாக சில பிரச்சினைகளை பிரதேச மட்டத்திலேயே தீர்க்க முடியும்.

பிரதேச செயலகங்களில் உள்ள சமூக பராமரிப்பு நிலையங்களை வலுவூட்டுவதன் ஊடாக பிரதேச மட்ட ஊராட்சி முற்றங்களை இலகுபடுத்த முடியும்.

ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் ஊராட்சி முற்ற அஞ்சல் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.அது தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியம்.அதனூடாகவும் பல பிரச்சனைகளை இணங்கான முடியும்.

அவ்வாறு ஊராட்சி முற்ற அஞ்சல் பெட்டியில் இடப்படுகின்ற கடிதங்களை சமுக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மாகாண மகளிர் விவகார அமைச்சிற்கு அனுப்பி வைக்கும் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஊராட்சி முற்றக் கலந்துரையாடல்களின் வெற்றி மற்றும் முன்னேற்றம் அரச அதிகாரிகளின் ஒத்துழைப்போடு முன்னேற்றப் பாதையில் செல்வதனை அவதானிக்க முடிகிறது. - என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

### 22 நாட்களில் 04 மாவட்டங்களை கடந்து

# மட்டு.மாவட்டத்திற்குள் பிரவேசித்த யாழ். கதிர்காம பாதயாத்திரீகர்கள்

(சகாதேவராஜா)

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து புறப்பட்ட யாழ் கதிர்காமம் பாதயாத்திரீகர்கள் 22 நாள்களில் 04 மாவட்டங்களைகடந்துமட்டுமாவட்டத்திற்குள் நேற்று (வெள்ளிக்கிழமை) 23 ஆவது நாள் பிரவேசித்தனர்..

யாழ். செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து கடந்த மே மாதம் முதலாம் திகதி புறப்பட்ட ஜெயா வேல்சாமி தலைமையிலான பாதயாத்திரை குழுவினர் 23 தினங்களில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய நான்கு மாவட்டங்களைக் கடந்து தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரவேசித்துள்ளனர்.

வெருகல் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தில் வெள்ளி பூஜையில் கலந்து கொண்டனர்.

மழை வெயிலுக்கு மத்தியில் சுமார் 100 அடியார்கள் இதில் பங்கேற்றுள்ளனர்.

எதிர்வரும் ஜூலை மாதம் 26 ஆம் திகதி கதிர்காமத்தை சென்றடைவர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.05.2025இல் வெளியிடப்பெற்றது